பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 50

27.07.2026

தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியருக்கு அரசு நிதியை தவறாக பயன்படுத்திய குற்ற வழக்கில் 4 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு

கடந்த 27.08.2012 அன்று அரசு உதவி பெறும் வித்வா ரத்னா வில்லா தொடக்கப்பள்ளி, வேலூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் பள்ளியில் படிக்கும் 187 மாணவர்கள் எண்ணிக்கை கூடுதலாக காண்பித்து மொத்தம் 259 மாணவர்கள் பயில்வதாகவும் அதற்காக கூடுதலாக 6 ஆசியர்கள் நியமனங்களையும், மதிய உணவு திட்டம் மற்றும் பிற சலுகைகளையும் பெற்று வந்தது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு கூடுதலான ஆசிரியர்களுக்குண்டான சம்பளம் மற்றும் மதிய உணவுக்குண்டான பொருட்கள் செலவினத்தொகை முறையே ரூ.4,67,121/- மற்றும் ரூ.2,762 அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட்டது கண்டறியப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1.திரு.கருணாகர சஞ்சீவ் தாஸ், தாளாளர் மற்றும் திருமதி.அலிஸ் தாபிதா விஜய குமாரி, தலைமை ஆசிரியை ஆகியோர்கள் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, வேலூர் பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கானது மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், ராணிப்பேட்டை மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 27.07.2026ந் - தேதி 1.திரு.கருணாகர சஞ்சீவ் தாஸ், தாளாளர் அவர்களுக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.35,000/- அபராதமும், 2.திருமதி.அலிஸ் தாபிதா விஜய குமாரி, தலைமை ஆசிரியை அவர்களுக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.40,000/- அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

PRESS RELEASE – 50
27.07.2026

CORRESPONDENT AND HEAD MISTRESS CONVICTED IN MISAPPROPRIATION CASE

On 27.08.2012, Vigilance and anti-Corruption, Vellore detachment officials along with inspection cell officers conducted a joint surprise check at Vitva Ratna Villa Government Aided Primary School and found that Tr. Karunagara Sanjeev Doss, Correspondent and Tmt. Alice Thabitha Vijay Kumari, Headmistress had allegedly fabricated school records and other connected documents to falsely show an inflated student strength. It is alleged that, while the actual number of students was lower, the records falsely reflected a total strength of 259 students, including 187 excess (non-existent) students. Based on the inflated student strength, the accused allegedly secured the appointment of six excess teaching posts and obtained corresponding government benefits, including salary for the excess teachers and noon meal allocations. Consequently, the Government exchequer suffered a wrongful loss of ₹4,67,121 towards salary and ₹2,762 towards noon meal provisions. On completion of investigation, the case was charge sheeted against the accused before the PDJ Court, Ranipet. Today (27.07.2026), Judgment was pronounced in this case and the accused Tr. Karunagara Sanjeev Doss, Correspondent was convicted to undergo Rigorous Imprisonment for 4 years and to pay a fine of Rs.35,000/- and Tmt. Alice Thabitha Vijay Kumari, Headmistress to undergo Rigorous Imprisonment for 4 years and to pay a fine of Rs.40,000/-.